(முழுப் பதிப்புரிமையுடையது)
(All rights reseved)



கொரோணா தொற்று நோய்

விசேட பாடசாலை விடுமுறை கால கல்வி வேலைத்திட்டம்- 2020

தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு

14 தலைப்புக்களின் கீழான நுண்ணறிவு செயலட்டை

இலக்கம் -7 காரண காரியங்களை இனங்காணல்

ஆக்கம்.

T.F.SHUHOOD.

ஆசிரிய ஆலோசகர்-

வலயக் கல்விப் பணிமனை - ஹம்பாந்தோட்டை.

071-182-6-181 – 077-635-8-304

அன்பின் சிறார்களே! உலகம் முழுவதும் பரவி வரும் கொரோணா வைரஸ் காரணமாக உங்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் வீட்டை விட்டு வெளியே செல்லாமல் பாதுகாப்பாக வீட்டில் இருந்தவாறே இங்கு காணப்படும் பயிற்சியையும் மேலதிக பயிற்சிகளையும் செய்து உங்கள் கல்விச் செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் படியும் வீணாக தொலைக்காட்சி பார்த்து காலத்தைக் கழிக்க வேண்டாம் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த தொகுப்பில் காரண காரியங்களை இனங்காணல் தொடர்பான விளக்கத்தையும் மாதிரி பயிற்சிகள் சிலவற்றையும் ஒன்று திரட்டி உங்கள் கைகளில் வழங்கியிருக்கின்றேன் அவைகளை நன்றாக விளங்கிக் கொண்டு இயலுமான வரையில் சுயமாக செய்து பயனடையும்படி கேட்டுக் கொள்கிறேன். - நன்றி



www.kalvi.lk

காரண காரியங்களை இனங்காணல்.

⁂ பின்வரும் கூற்றுக்கள் ஒரு காரியத்திற்கான காரணம் எனின் சரி என எழுதுக இல்லையெனின் பிழை என எழுதுக.

1) கடும் மழை பெய்ததால் ஆறு பெருக்கெடுத்து ஓடியது. ( )

2) பால் குடித்ததனால் குழந்தை நித்திரை செய்தது. ( )

3) அமைச்சர் ஊருக்கு சேவை செய்ததால் தேர்தலில் வெற்றி பெற்றார். ( )

4) நல்ல முறையில் சிகிச்சை செய்ததால் நோய் குணமானது. ( )

5) பசியேற்பட்டதால் சோறு சாப்பிட்டேன். ( )

6) மின்குமிழ் ஒளிர்ந்ததனால் இருள் சூழ்ந்தது. ( )

7) நான் பேனை இல்லாதபடியால் வெண்கட்டியால் எழுதினேன். ( )

8) வங்கிக்குச் செல்ல வாகனம் இல்லாதபடியால் நடந்து சென்றேன். ( )

9) மரம் அசைந்ததால் காற்று வீசியது. ( )

10) கடும் காற்றினால் மண்சரிவு ஏற்பட்டது. ( )

11) நான் நல்ல முறையில் விளையாடியதால் வெற்றி பெற்றேன். ( )

12) மருந்து எடுத்ததால் இருமல் குணமானது. ( )

13) நடந்து போனதால் 1 km தூரத்தை 10நிமிடத்தில் கடந்தேன். ( )

❖ கீழே கூறப்பட்டுள்ளவைகளுக்கான மிகவும் சரியான விடையைக் கீறிடுக.

1) சென்றமுறை விளைச்சல் சிறப்பாக இருந்தது. அதற்கான காரணம்

   1. வெள்ளம் ஏற்பட்டதால்
   2. நீர் கிடைத்ததால்
   3. கோடை ஏற்பட்டதால்.

2) பேருந்து புகைவண்டியுடன் மோதியது. அதற்கான காரணம்

   1. சாரதியின் திறமை
   2. சாரதியின் கவனயீனம்.
   3. பொருத்தமற்ற வீதி

www.ikedu.lk

3) திடீரென சுனாமி பேரலை ஏற்பட்டது அதற்கான காரணம்.

1. பலத்த காற்று வீசியதால்
2. தரையில் பூகம்பம் ஏற்பட்டதால்.
3. கடலில் பூகம்பம் ஏற்பட்டதால்.

4) நான் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றேன். அதற்கான காரணம்.

1. சரியாக விடை எழுதியதால்
2. வினாவைப் பார்த்து எழுதியதால்
3. இரவில் படித்ததால்

5) எமது வாகனம் நின்று விட்டது அதற்கான காரணம்

1 சாரதி தடையை மிதித்ததால்
2. சக்கரம் சுற்றுவதால்
3. மக்கள் ஏறியதால்.

6) தம்பி வயிற்று வலியால் அவதிப்பட்டான். அவ்வாறு ஏற்பட காரணம்

1. அவன் மாம்பழத்தை கழுவிச் சாப்பிட்டதால்
2. அவன் மாம்பழத்தைக் கழுவாமல் சாப்பிட்டதால்
3. அவன் கொதித்தாறிய நீரை பருகியமையால்.

7) தங்கை சத்தமிட்டு அழுதாள் அதற்கான காரணம்

1. அம்மா அருகில் இல்லாததால்
2. விளையாட ஒன்றும் இல்லாததால்
3. வேறு வேலை இல்லாதால்

8) புத்தகங்கள் வாசிப்பது நல்ல பழக்கமாகும் அதற்கான காரணம்

1. விளையாடுவதற்கு நேரத்தை ஒதுக்குவது பயனற்ற செயல் என்பதால்
2. புத்தகங்கள் வாசிப்பதால் அறிவு கிடைக்கும் என்பதால்
3. வாசிகசாலையில் அதிகமான புத்தகங்கள் இருப்பதால்

www.kedu.lk

9) உடற்பயிற்சி செய்வது மிகவும் ஏற்றதாகும் அதற்கான காரணம்

1. உடலுக்கு ஓய்வு கிடைப்பதால்
2. உடலுக்கும் உள்ளத்திற்கும் புத்துணரச்சி கிடைப்பதால்
3. நோய் வராது என்பதால்

10) புத்தாண்டு காலத்தில் பொருட்களின் விலை அதிகமாகும் அதற்கான காரணம்

1. மக்கள் புதிய பொருட்கள் வாங்காதபடியால்
2. சந்தையில் பொருட்கள் இல்லாத படியால்.
3. புத்தாண்டுக்கு மக்கள் பொருட்கள் வாங்குவதால்

11) உலகில் தண்ணீர் இல்லாமல் போனால் நடக்கக் கூடியது

1. மக்கள் குளிர் பானம் குடிப்பார்கள்.
2. மக்கள் வேறு கிரகத்தில் உயிர் வாழச் செல்வார்கள்.
3. உலகத்தில் உயிர்களின் வாழ்க்கை முடிவுபெறும்.

12) நாட்டில் தொடர்ந்தும் அடைமழை பெய்தால் முதலில் நடைபெறுவது

1. நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் அதிகரிக்கும்.
2. நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறந்து விடப்படும்.
3. நாட்டில் விவசாய பயிர்ச்செய்கை பாதிப்படையும்.

❖ பின்வரும் கூற்றுக்கள் பிழையானவையாகும். அதற்கான காரணத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) 2019 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எழுதி 120 புள்ளிகள் பெற்ற மீனா: அடுத்த வருட பரீட்சையில் 180 புள்ளிகளைப் பெறுவதாகக் கூறினாள்.

.....

.....

2) 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களில் ஒலிம்பிக் போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்றது.

.....

.....

www.ikedu.lk

3) அதிகாலையில் கிணற்றில் குளிப்பதற்கு சென்ற முரளிக்கு நீர் அதிக குளிராக இருப்பதை உணர்ந்து தனது அயல் வீட்டு நண்பனிடம் அதுபற்றிக் கூறிய போது "முதலாம் வாளி நீரை எடுத்து வீசிவிடு. இரண்டாம் வாளி நீரினால் குளி" என ஆலோசனைக் கூறினான்.

.....

.....

4) 20 ற்கு 20 கிரிக்கட் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த ஒரு வேகப்பந்து வீச்சாளர் 10 ஓவர்கள் பந்து வீசி 6 விக்கட்டுக்களைப் பெற்று சாதனைப் படைத்தார்.

.....

.....

5) மிகவேகமாகச் சென்ற பேருந்து சிவப்புக் கோட்டினால் வீதியை மாறிக் கொண்டிருந்த பல மக்களை முட்டி மோதிவிட்டுத் தப்பிச் சென்றது.

.....

.....

6) பாத்திமா வீதியில் சென்று கொண்டிருக்கும் போது தனது பாடசாலை உடையில் பட்ட தார் கறையை சவர்க்காரம் கொண்டு மிகச் சுத்தமாகக் கழுவினாள்.

.....

.....

7) பல நாட்களாகப் பெய்து வந்த கடும் மழையினால் ஏற்பட்ட சுனாமி பேரலையில் நூற்றுக்கு மேற்பட்டோர் மூழ்கி இறந்தனர்.

.....

.....

www.ikeu.lk

அன்பின் பெற்றோர்கள் அறிய,

உங்கள் சிறார்களுக்கு விடுமுறை காலத்தில் எவ்வாறான பயிற்சிகளை வழங்க வேண்டும் ,எப்போது வழங்க வேண்டும் போன்ற பிரச்சினைகளுக்கு ஒரு சிறிய தீர்வாக இந்த நுண்ணறிவுத் தொகுப்பினை பிரசுரித்துள்ளேன். இங்கு காணப்படும் பயிற்சிகளை ஒரு உதாரணமான பயிற்சியாகக்கருதி இதுபோன்ற பல வினாக்களை உருவாக்கி உங்கள் பிள்ளைகளுக்கு தினமும் ஒரு பயிற்சியாக குறிப்பிட்ட நேரத்தில் வழங்கி அவர்களின் புலமைப்பரிசில் பரீட்சைக்கான தயார்படுத்தலை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பமாக இந்த விடுமுறையை ஆக்கிக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த நுண்ணறிவுத் தொகுப்பினை யாரும் **வியாபார நோக்கத்திற்குப்** பயன்படுத்த வேண்டாம் என்றும் மிகவும் வினயமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

T.F.SHUHOOD.

ஆசிரிய ஆலோசகர்-

வலயக் கல்விப் பணிமனை - ஹம்பாந்தோட்டை.

❖தொலைபேசி இல

071-182-6-181 – 077-635-8-304 – 047-222-1-503

❖மின்னஞ்சல்

primaryisa@gmail.com

❖தொடர்புகளுக்கு

STUDY CENTRE

(The Centre for Primary Education)

48/1, BARRACK STREET,

HAMBANTOTA.

www.ikedu.lk